# மார்க்கக் கல்வியைத் தொடங்கும் ஆரம்பநிலை மாணவர்களுக்கான சரியான வழிமுறை

மதிப்பிற்குரிய அஷ்ஷய்க் டாக்டர் அரஃபாத் பின் ஹஸன் அல்முஹம்மதீ
﴿ அல்லாஹ் அவர்களை பாதுகாப்பானாக ﴾

بسم الله الرحمن الرحيم

## கேள்வி:

மார்க்கக் கல்வியைத் தேடுவதற்கான சரியான வழிமுறை எது? ஒரு ஆரம்ப நிலை மாணவர், கல்வியைத் தேடுவதில் படிப்படியாக முன்னேறுவதற்கு நீங்கள் வழங்கும் அறிவுரை என்ன? அல்லாஹ் உங்களுக்கு நற்கூலியை வழங்குவானாக.

## பதில்:

கல்வி தேடுவதற்கான வழிமுறையைப் பொறுத்தவரை; கல்வியை பயில விரும்பும் மாணவன் ஆரம்பமாக அல்லாஹ்வுடைய வேதமான குர்ஆனுக்கு முக்கியத்துவம் அளிப்பது அவசியமானது என்பதில் எவ்வித சந்தேகமும் ஐயமும் இல்லை.

குறிப்பாக, அவர் சிறுவயதிலேயே கல்வி தேட ஆரம்பித்து, அவரது தந்தை அவரை மார்க்கக் கல்வியின் பக்கம் வழிநடத்தியிருந்தால், அவர் அல்லாஹ்வுடைய வேதத்தின் மீது பிரத்யேக கவனம் செலுத்த வேண்டும்.

அதாவது அதனை (குர்ஆனை):

- வாசித்தல்,
- ஓதுதல்,
- மனனம் செய்தல்,
- ஒருவருக்கொருவர் ஒப்பித்துப் பார்த்தல் மற்றும்
- மனப்பாடம் செய்ததை திரும்பத் திரும்ப ஓதி தக்கவைத்தல் (முராஜஆ) ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

ஏனெனில், திருக்குர்ஆனை மனனம் செய்வதுதான் கல்வி தேடுவதன் அடிப்படை ஆகும். அதேபோல; கல்வியானது அதற்குரிய தகுதியானவர்களிடமிருந்து பெறப்பட

வேண்டும். எனவே, (பெற்றோர்களே) உங்கள் பிள்ளையை கல்வி கற்க அனுப்பி வைக்க உங்களால் முடிந்தால் - அல்லது ஆரம்ப நிலை மாணவராக இருக்கும் (நீங்கள்) உங்களால் முடிந்தால் - நீங்கள் பயணம் செய்ய வேண்டும்;

ஏனெனில், இதுதான் கல்வியை பயில்வதற்கான உண்மையான வழியாகும்.

ஸலஃபுகள் (முன் சென்ற சான்றோர்கள்) செய்ததைப் போலவே, நீங்களும் பயணம் செய்யுங்கள், (கல்விக்காக) வெளியிலே செல்லுங்கள், அந்தந்த ஊர்களில் உள்ள அறிஞர்களிடமிருந்து கல்வியைத் தேடுங்கள்.

நாம் (சற்றுமுன் உள்ள வகுப்பில்) இமாம் இப்னு குதாமா (இ: 620 ஹி) அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டோம்; அவர் எப்படி பக்தாத் மற்றும் மவ்ஸில் போன்ற நகரங்களுக்குப் பயணம் செய்தார், அவ்வாறே பல நாடுகளுக்குப் பயணம் செய்து, ஒவ்வொரு இடத்திலும் பல ஆண்டுகள் இங்கும் அங்கும் தங்கி கல்வி கற்றார் என்பதையும் பார்த்தோம்.

ஸலஃ்புகளில் சிலர் ஒரு பயணத்திலிருந்து மற்றொரு பயணம் எனத் தொடர்ந்து நாற்பது ஆண்டுகள் வரை கல்வியிலேயே கழித்திருக்கிறார்கள்.

திருக்குர்ஆனை மனனம் செய்வதைப் போலவே, நீங்கள் ஸுன்னாவையும் (ஹதீஸ்களையும்) மனனம் செய்யுங்கள்.

Islam Tamil
இஸ்லாம் தமிழ்

அல்லாஹ்வுக்கே புகழனைத்தும், இன்று ஹதீஸ் நூல்கள் மிகவும் இலகுவாக்கப்பட்டுள்ளன, பரவலாகக் கிடைக்கின்றன மற்றும் அச்சிடப்பட்டுள்ளன.

ஹதீஸ் மனனத்தை நீங்கள் கீழ்க்கண்ட வரிசையில் ஆரம்பிக்க வேண்டும்:

1. அல்-அர்பஊன் அந்-நவவிய்யா (இமாம் நவவியின் 40 ஹதீஸ்கள்).
2. பின்னர், ஜவாமிஉல் அக்பார் (இமாம் அஸ்-ஸஃதி எழுதியது).
3. அதற்கடுத்து, உம்தத்துல் அஹ்காம் நூலுக்கு நகர வேண்டும். (ஃபிக்ஹு சட்டங்கள் சார்ந்து 414 ஹதீஸ்களின் தொகுப்பு).

4. அதன்பின், புலூகுல் மராம் நூலை மனனம் செய்ய வேண்டும்.(ஃபிக்ஹு சட்டங்கள் சார்ந்து 1568 ஹதீஸ்களின் தொகுப்பு).

5. தொடர்ந்து, ரியாதுஸ் ஸாலிஹீன் நூலை கற்க வேண்டும். (மார்க்க சட்டம், ஒழுக்கம் போன்ற பல்வேறு தலைப்புகளின்கீழ் தொகுக்கப்பட்ட 1896 ஹதீஸ்களின் தொகுப்பு).

(இதற்குப் பிறகும்) அல்லாஹ் உங்களுக்கு கல்வி ஞானத்தைத் திறந்து கொடுத்து, இன்னும் உங்களால் முடியுமெனில், அதன் பிறகு ஸஹீஹைன் அதாவது: ஸஹீஹுல் புகாரி, பிறகு ஸஹீஹ் முஸ்லிம்

ஆகியவற்றைத் (மனனம் செய்ய) தொடங்க வேண்டும்.

இவ்வாறாக ஒருவர் செய்தாரேயெனில், அது ஒரு மகத்தான அருட்கொடையாகும் . குறிப்பாக, அல்லாஹ் யாருக்கு மனன சக்தியை வழங்கியுள்ளானோ அவர்களுக்கு இது மிகப்பெரிய பாக்கியமாகும்.

(ஆனால்) சிலருக்கு மனன சக்தி பலவீனமாகவும், தளர்வாகவும் இருக்கலாம்; இதனால் அவர்கள் மனனம் செய்வதில் மிகவும் சிரமப்படுவார்கள், மேலும் அதற்கேற்ற பலனும் அவர்களுக்குக் கிடைக்காது. அத்தகையவர்களுக்கு நாம் கூறுவது:

(ஹதீஸ்களை) மனனம் செய்வதில் அல்லாஹ் உங்களுக்கு அந்த வழியைத் திறக்கவில்லை எனில், அல்லாஹ்வுடைய வேதத்தை பேணுவதிலேயே நிலைத்திருங்கள். பிறகு, புரிந்துகொள்வதில் (சரியான முறையில் விளங்கிக்கொள்வதில்) உங்கள் கவனத்தைத் திருப்புங்கள்.

மனனம் செய்தவை அதன் பலவீனத்தின் காரணமாக உங்கள் நினைவை விட்டு நழுவிச் செல்லும்போது, அதற்காக நேரத்தை வீணடிப்பதை விட, நீங்கள் (குர்ஆனையும், ஹதீஸ்களையும் மற்றும் மார்க்க நூல்களையும்) வாசிப்பதும் அவற்றை விளங்குவதும் உங்களுக்குச் சிறந்தது.

இருப்பினும், மனனக் கலையின் அடிப்படை என்னவென்றால், நீங்கள் எவ்வளவு அதிகமாக மனனம் செய்கிறீர்களோ அவ்வளவு அதிகமாக உங்கள் மனன சக்தி வலுப்பெறும். நீங்கள் எவ்வளவு அதிகமாக திரும்பத் திரும்ப ஒப்பித்துப் பார்த்து தக்கவைக்கிறீர்களோ, அவ்வளவு அதிகமாக அந்த மனனம் உறுதிபெறும்.

ஏனெனில், இது ஒரு மனிதனின் உலக விஷயங்களிலும் உள்ள ஒரு வழக்கமாகும். எதற்கெல்லாம் பழகிக்கொள்கிறானோ, அதில் அவன் தேர்ச்சியும் நிபுணத்துவமும் பெறுகிறான். உலக விஷயங்களில் கூட, ஒரு தந்தை தன் மகனை எதில்

பழக்குகிறாரோ அதுவே அவனுக்கு வழக்கமாகி விடுகிறது.

அதேபோல; நேரத்தின் மீதும் மிகுந்த அக்கறை கொள்வதும் அவசியமாகும். நம்மில் பலர் கல்வி கற்க ஒரு சரியான வழிமுறையை எதிர்பார்க்கிறார்கள், கல்வியை எப்படி அடைவது என்று அறிய விரும்புகிறார்கள். ஆனால், அவர்கள் தங்களது நேரத்தை வீணடிக்கிறார்கள்; (இவ்வாறு தொடர கடைசியில்) அவர்களுக்குச் சலிப்பும் மனச்சோர்வும் ஏற்படுகிறது,
அதன் விளைவாகக் கல்வி தேடுவதையே அவர்கள் விட்டுவிடுகிறார்கள்.

அடிப்படையிலேயே நீங்கள் உங்கள் நேரத்தைப் பாதுகாக்காமலும், அதன் மீது மிகுந்த அக்கறை கொள்ளாமலும் இருக்கும்போது, ஒரு கல்வி பயிலும் வழிமுறையை அறிந்துக்கொள்ள முற்படுவதில் என்ன பயன்?

மேலும், ஒரு கல்வி பயிலும் மாணவனாக இருப்பதற்கு உங்களைத் தகுதியாக்கக் கூடிய பொறுமை (ஸப்ர்) உங்களிடம் இல்லை (எனில் அந்த வழிமுறையினால் பயனில்லை).

நிச்சயமாக ஸப்ர் (உறுதிமிக்க பொறுமை) மிக அவசியமாகும்.. நீங்கள் எதை நாடுகிறீர்களோ அந்த "கல்வி தேடும்" பணியிலேயே உங்கள் முழு கவனத்தையும்

நிலைநிறுத்த அந்த விடாமுயற்ச்சி தேவைப்படுகிறது.

- வாசிப்பதில் உறுதியுடனும் பொறுமையுடனும் இருங்கள் (சலிப்புக்கு இடம் கொடுக்காதீர்கள்),
- எழுதுவதில் உறுதியாக இருங்கள்,
- மனனம் செய்வதில் உறுதியாக இருங்கள்.

கவனத்தைச் சிதறவிடாதீர்கள்; உங்களை திசைதிருப்ப வரும் அனைத்தையும் சகித்துக்கொண்டு, உங்கள் இலக்கில் உறுதியாக நில்லுங்கள்.

உங்களுடைய இந்த நேரங்கள் அனைத்தையும் கல்விக்காக அமர்வதிலேயே செலவிடுங்கள்; அது

நீங்கள் செவிமடுக்கும் ஒரு வகுப்பாக இருக்கலாம், அல்லது நீங்கள் வாசிக்கும் ஒரு பாடமாக இருக்கலாம், அல்லது ஒரு அறிஞரிடம் சென்று அவருக்கு முன்னால் அமர்ந்து அவரிடம் கற்பதாக இருக்கலாம், அல்லது தகுதியான ஒரு கல்வி மாணவரிடம் கற்பதாக இருக்கலாம். ஆனால், இரவு பகலாக உங்களது நேரம் வீணடிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில்; நீங்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு அலைந்து கொண்டும், பல்வேறு சேனல்கள் மற்றும் சமூக ஊடகங்களுக்கு (உங்கள் நேரத்தை) கொடுத்துக் கொண்டும், தெருக்களிலும் வெளியில் இங்கும் அங்கும் சுற்றிக்கொண்டும், நண்பர்களுடன் எவ்விதப்

பயனுமற்ற, நீண்ட நேரத்தை விழுங்கக்கூடிய உலாவுதல்களிலும் (வெளியே செல்வதிலும்) பயணங்களிலும் உங்களை ஆழ்த்திக்கொண்டிருந்தால், இவை அனைத்தும் நேரத்தை வீணடிக்கக்கூடியவை மட்டுமே. இவை வருடங்கள்; இவை உங்கள் வாழ்க்கையில் எண்ணப்பட்ட (மிகச் சில) நாட்களே ஆகும். ஆம் (இதை நீங்கள் உணர வேண்டும்).

Islam Tamil
இஸ்லாம் தமிழ்

www.islamtamil.com

மொழிபெயர்ப்பு – அஸ்லம் பின் ஹாஷிம்

@islamtamilinfo

# الْمَنْهَجِيَّةُ الصَّحِيحَةُ فِي طلب العلم

لفضيلة الشيخ عرفات بن حسن المحمدي – ﴿حفظه الله تعالى﴾

بسم الله الرحمن الرحيم

السُّؤالُ: هَذَا سَائِلٌ يَقُولُ: مَا هِيَ الْمَنْهَجِيَّةُ الصَّحِيحَةُ فِي طَلَبِ الْعِلْمِ؟ وَبِمَاذَا تَنْصَحُونَ الْمُبْتَدِئَ كَيْ يَتَدَرَّجَ فِي طَلَبِ الْعِلْمِ؟ وَجزَاكُمُ اللهُ خيْرًا.

الْجَوَابُ : أَمَّا بِالنِّسْبَةِ لِلْمَنْهَجِيَّةِ فِي طَلَبِ الْعِلْمِ؛ فَلَا شَكَّ وَلَا رَيْبَ أَنَّ طَالِبَ الْعِلْمِ عَلَيْهِ أَنْ يَعْتَنِيَ ابْتِدَاءً بِكِتَابِ اللهِ، لَا سِيَّمَا إِذَا كَانَ فِي الصِّغَرِ وَأَدْرَكَ طَلَبَ الْعِلْمِ مِنْ صِغَرِهِ وَوَجَّهَهُ أَبُوهُ إِلَى طَلَبِ الْعِلْمِ؛ فَلْيَعْتَنِ اعْتِنَاءً خَاصًّا بِكِتَابِ اللهِ قِرَاءَةً، وَتِلَاوَةً، وَحِفْظًا، وَمُذَاكَرَةً، وَمُرَاجَعَةً؛ لِأَنَّ هَذَا هُوَ الْأَصْلُ فِي طَلَبِ الْعِلْمِ أَنْ تَحْفَظَ الْقُرْآنَ.

كَذَلِكَ أَيْضًا؛ الْعِلْمُ يُؤْخَذُ عَنْ أَهْلِهِ، فَإِذَا اسْتَطَعْتَ أَنْ تَدْفَعَ بِوَلَدِكَ -أَوْ أَنْتَ يَا طَالِبَ الْعِلْمِ الْمُبْتَدِئُ إِذَا اسْتَطَعْتَ- أَنْ تَرْحَلَ فَيَنْبَغِي أَنْ تَرْحَلَ؛ لِأَنَّ هَذَا هُوَ السَّبِيلُ الْحَقِيقِيُّ لِطَلَبِ الْعِلْمِ. اِرْحَلْ وَتَغَرَّبْ وَاطْلُبِ الْعِلْمَ عَنْ أَهْلِهِ فِي بِلَادِهِ كَمَا كَانَ السَّلَفُ يَفْعَلُونَ. وَقَدْ ذَكَرْنَا ابْنَ قُدَامَةَ وَكَيْفَ أَنَّهُ رَحَلَ إِلَى بَغْدَادَ وَإِلَى الْمَوْصِلِ، وَرَحَلَ كَذَلِكَ إِلَى أَكْثَرَ مِنْ بَلَدٍ، وَكَانَ يَبْقَى السَّنَوَاتِ هُنَا وَهُنَا وَهُنَا، وَبَعْضُ السَّلَفِ بَقِيَ أَرْبَعِينَ سَنَةً وَهُوَ مِنْ رِحْلَةٍ إِلَى رِحْلَةٍ.

ثَالِثًا: الْحِفْظُ. كَمَا أَنَّكَ تَحْفَظُ الْقُرْآنَ؛ احْفَظِ السُّنَّةَ، فَالْحَمْدُ للهِ الْكُتُبُ مُيَسَّرَةٌ، وَمَوْجُودَةٌ، وَمَطْبُوعَةٌ. ابْدَأْ بِـ:

- الْأَرْبَعِينَ النَّوَوِيَّةِ.
- ثُمَّ جَوَامِعِ الْأَخْبَارِ لِابْنِ سَعْدِيٍّ.

- ثُمَّ تَنْتَقِلُ إِلَى عُمْدَةِ الْأَحْكَامِ.
- ثُمَّ إِلَى بُلُوغِ الْمَرَامِ.
- ثُمَّ إِلَى رِيَاضِ الصَّالِحِينَ.

فَإِذَا فَتَحَ اللهُ عَلَيْكَ وَاسْتَطَعْتَ؛ تَبْدَأُ بِالصَّحِيحَيْنِ: الْبُخَارِيِّ ثُمَّ مُسْلِمٍ، وَهَكَذَا. فَهَذِهِ نِعْمَةٌ عَظِيمَةٌ، لَا سِيَّمَا إِذَا كُنْتَ مِمَّنْ رَزَقَكَ اللهُ الْحِفْظَ.

بَعْضُهُم مَنْ حِفْظُهُ ضَعِيفٌ وَرَكِيكٌ؛ فَهَذَا يَتْعَبُ فِي الْحِفْظِ وَلَا يَسْتَفِيدُ كَثِيرًا، فَنَقُولُ لَهُم: مَا دَامَ اللهُ لَمْ يَفْتَحْ عَلَيْكَ فِي الْحِفْظِ (أي: في حِفْظِ الأحاديثِ)؛ ابْقَ فِي كِتَابِ اللهِ مُعْتَنِيًا بِهِ، وَانْصَرِفْ إِلَى الْفَهْمِ؛ اِقْرَأْ فَقِرَاءَتُكَ وفَفَهْمُكَ خَيْرٌ لَكَ مِنْ أَنْ تُضِيعَ الْأَوْقَاتَ فِي الْحِفْظِ وَأَنْتَ يَتَفَلَّتُ عَلَيْكَ الحِفْظُ لِضَعْفِهِ. وَإِنْ كَانَ الْأَصْلُ فِي الحِفْظِ كُلَّمَا حَفِظْتَ كُلَّمَا تَقَوَّى حِفْظُكَ، وَكُلَّمَا ذَاكَرْتَ وَرَاجَعْتَ فَإِنَّ الحِفْظَ يَصِيرُ فِيهِ قُوَّةٌ؛ لِأَنَّ الْإِنْسَانَ

–وَهَذِهِ عَادَةٌ حَتَّى فِي أُمُورِهِ الدُّنْيَوِيَّةِ– أَيُّ شَيْءٍ يَتَعَوَّدُ عَلَيْهِ يُحْسِنُهُ وَيُتْقِنُهُ حَتَّى فِي أُمُورِ الدُّنْيَوِيَّةِ فَهِيَ عَادَةٌ عَلَى مَا عَوَّدَهُ عَلَيهِ أَبُوهُ .

كَذَلِكَ أَيْضًا؛ الِاعْتِنَاءُ بِالْوَقْتِ. كَثِيرٌ مِنَّا يُرِيدُ الْمَنْهَجِيَّةَ يُرِيدُ كَيْفَ يَطْلُبُ العِلْمَ، لَكِنَّهُ يُضِيعُ وَقْتَهُ وَيَأْتِيهِ الْمَلَلُ وَالضَّجَرُ فَيَتْرُكُ الطَّلَبَ. فَمَا الْفَائِدَةُ إِذًا أَنْ تَبْحَثَ عَنْ مَنْهَجِيَّةٍ وَأَنْتَ أَصْلًا لَا تُحَافِظُ عَلَى وَقْتِكَ وَلَا تَحْرِصُ عَلَيْهِ؟ وَمَا عِنْدَكَ الصَّبْرُ الَّذِي يُؤَهِّلُكَ لِأَنْ تَكُونَ طَالِبَ عِلْمٍ.

لَا بُدَّ مِنْ صَبْرٍ؛ وَالصَّبْرُ هُوَ فِي الْقِرَاءَةِ، وَفِي هَذَا الْعَمَلِ نَفْسِهِ الَّذِي تُرِيدُهُ وَهُوَ "الطَّلَبُ". اصْبِرْ عَلَى الْقِرَاءَةِ، اصْبِرْ عَلَى الْكِتَابَةِ، اصْبِرْ عَلَى الْحِفْظِ. اجْعَلْ هَذِهِ السَّاعَاتِ كُلَّهَا تَذْهَبُ فِي هَذَا الْجُلُوسِ لِلطَّلَبِ؛ سَوَاءٌ فِي دَرْسٍ تَسْمَعُهُ، أَوْ تَقْرَؤُهُ، أَوْ تَذْهَبُ إِلَى عَالِمٍ وَتَجْلِسُ بَيْنَ يَدَيْهِ وَتَقْرَأُ عَلَيْهِ أَوْ طَالِبِ عِلْمٍ مُتَمَكِّنٍ.

أَمَّا وَالْوَقْتُ لَيْلاً ونَهَاراً يَضِيعُ وَأَنْتَ مِنْ مَكَانٍ إِلَى مَكَانٍ، وَمِنْ قَنَوَاتٍ إِلَى وَسَائِلِ تَوَاصُلٍ، وَإِلَى الشَّارِعِ وَإِلَى الْخَرَجَاتِ وَالطَّلَعَاتِ مَعَ أَصْحَابِكَ وَالسَّفَرِيَّاتِ الَّتِي تَأْخُذُ وَقْتًا طَوِيلاً لَا فَائِدَةَ مِنْهَا؛ فَكُلُّ هَذَا يُضِيعُ الْوَقْتَ. هِيَ سَنَوَاتٌ، هِيَ أَيَّامٌ مَعْدُودَةٌ مِنْ حَيَاتِكَ، نَعَمْ».

www.islamtamil.com